**நகரமன்றம், குடியாத்தம்** **நாள் : 23.04.2020**

# அறிவிப்பு

**2020-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24-ம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 12.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெறும்.**

**முன்னிலை : திரு.எச்.இரமேஷ்,பி.எல்., நகரமன்ற தனி அலுவலர்**

## கூட்ட நிரல்

1. இந்நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் காவேரி கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் பசுமாத்தூர் உள்ளூர் நீர் ஆதாரத்திலிருந்து வினியோகிக்கப்படும் குடிநீரில் திரவ குளோரின் கலந்து குடிநீர் வினியோகம் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.25,00,000/-க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் முன் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று முன் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.இ1/2078/2019)

2. இந்நகராட்சி வார்டு எண்.12 ஆர்.எஸ்.நகரில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கிணற்றில் உள்ள நீர் மூழ்கி மின்மோட்டார் பழுதாகி குடிநீர் வினியோகம் பாதிக்கப்பட்டதால் உடனடியாக புதிய நீர்மூழ்கி மின்மோட்டார் வாங்கி பொருத்தி இயக்க கீழ்காணும் ஒப்பந்ததாரரிடம் இருந்து பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் அடிப்படையில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய எஸ்.முருகன் நகராட்சி ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கி பணி முடிக்கப்பட்டதற்கு ஆன செலவினம் ரூ.22,620/- க்கு மன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகின்றது.

| வ. எண் | பணியின் பெயர் | அளவு | எஸ்.முருகன் | ஸ்ரீ அம்மன் கான்ட்ராக்டர்ஸ் | எஸ்.சிவக் குமார் |
|---|---|---|---|---|---|
| 1 | புதிய 15 lpm x 60m மின்மோட்டார் கொள்முதல் சரிசெய்யும் பணி GST உள்பட | 1 Nos | 20820.00 | 20850.00 | 20870.00 |
| 2 | போரில் இருந்து பழைய மின்மோட்டாரை கழற்றி புதிய மின்மோட்டார் பொருத்துதல் பணி | 1 Nos | 1800.00 | 1850.00 | 1850.00 |
| | **மொத்தம்** | | 22620.00 | 22700.00 | 22720.00 |

அலுவலக குறிப்பு :

1) மன்றம் பதிவு செய்யலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொண்டு முடித்தமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ1/2078/2019)

3. இந்நகராட்சி வார்டு எண்.15 செதுக்கரை பெருமாள் கோவில் தெரு பின்புறம் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பொதுக் கழிப்பிடத்தில் இருக்கும் ஆழ்துளை கிணற்றில் உள்ள நீர்மூழ்கி மின்மோட்டார் பழுதாகி பொதுக் கழிப்பிடம் பயன்படுத்த இயலாத நிலை ஏற்பட்டு உள்ளது. குடிநீர் வினியோகம் பாதிக்கப்பட்டதால் பொது மக்களின் பயன்பாடு கருதி புதிய நீர் மூழ்கி மோட்டார் வாங்கி பொருத்தி இயக்க கீழ்காணும் நிறுவனம் மற்றும் ஒப்பந்ததாரரிடம் இருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் அடிப்படையில் குறைவான விலைப்புள்ளி தொகை வழங்கிய ஸ்ரீ செல்லியம்மன் ஹார்டுவேர் (ம) எலக்ட்ரிக்கல்ஸ், குடியாத்தம் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கி பணி முடிக்கப்பட்டதற்கு ஆன செலவு தொகை ரூ.21,829/-க்கு மன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | அளவு | ஸ்ரீ செல்லியம்மன் ஹார்டுவேர் (ம) எலக்ட்ரிக்கல்ஸ் | சுரேஷ் கன்ஸ்ட்ரக்ஷன் | DCN கன்ஸ்ட்ரக்ஷன் |
|---|---|---|---|---|---|
| 1 | புதிய 15 lpm x 40m மின்மோட்டார் கொள்முதல் செய்யும் பணி GST உள்பட | 1 Nos | 20029.00 | 20050.00 | 20075.00 |
| 2 | போரில் இருந்து பழைய மின்மோட்டாரை கழற்றி புதிய மின்மோட்டார் பொருத்துதல் பணி | 1 Nos | 1800.00 | 1850.00 | 1875.00 |
| | **மொத்தம்** | | 21829.00 | 21900.00 | 21950.00 |

அலுவலக குறிப்பு :
1) மன்றம் பதிவு செய்யலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொண்டு முடித்தமைக்கும் செலவினத் தொகை ரூ.21,829/-ஐ ஸ்ரீ செல்லியம்மன் ஹார்ட்டுவேர் (ம) எலக்ட்ரிக்கல்ஸ் அவர்களுக்கு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

4. குடியாத்தம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகர்பகுதியில் சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் குப்பைகளை அல்ட்ராடெக் சிமெண்ட் கம்பெனி திருச்சி. வாடகை வண்டியில் ஏற்றுமதி செய்யும் பணிக்கு விலைப்புள்ளி வரப்பெற்றதின் பேரில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **அளவு** | **G.M.S. Transport Gym** | **Vanakkam Transport Agency, Gym** | **A.Babu, Lorry Booking Office, Gym** |
|---|---|---|---|---|---|
| 1 | குடியாத்தம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகர் பகுதியில் சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் குப்பைகளை அல்ட்ராடெக் சிமெண்ட் கம்பெனி, திருச்சி ஏற்றுமதி செய்ய வண்டி வாடகை மற்றும் இதர செலவினம் உள்பட | 1 Nos | 21600.00 | 22700.00 | 23800.00 |
| | **மொத்தம்** | | 21600.00 | 22700.00 | 23800.00 |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைபுள்ளிக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
அலுவலக குறிப்பு :
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று முன் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1337/2017/எச்1)

5. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் த்டை செய்யப்பட்ட பிளாஸ்டிக் அபராதம் பில் புத்தகம், D & O பில் புத்தகம், குடியாத்தம் நகரம் தூய்மையாக வைக்க குப்பைகள் கொட்டாதீர்கள் குறித்த விழிப்புணர்வு பேனர்கள் அச்சடிப்பதற்கான பணிகள் மேற்கொள்ள 21.03.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டமைக்கு கீழ்கண்டுள்ள விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | அளவு | S.S.Offset Printers, Gym | Shankar Digital Banner Offset & Book Binding, Gym | Prabhu Offset Computer, Gym |
|---|---|---|---|---|---|
| 1 | D & O பில் புத்தகம் | 20 Nos | 6800.00 | 6600.00 | 7000.00 |
| 2 | தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் அபராதம் பில்புத்தகம் | 20 Nos | 6800.00 | 6600.00 | 7000.00 |
| 3 | இயற்கை உரம் பில் புத்தகம் | 20 Nos | 4800.00 | 4600.00 | 5000.00 |
| 4 | D&O வரிவசூல், அல்ட்ராடெக் சிமெண்ட் SBM, SWM வட்டங்கள் பேனர்கள் | 10 Nos | 3700.00 | 3600.00 | 3800.00 |
| 5 | குடியாத்தம் நகரம் தூய்மையாக வைக்க குப்பைகள் குறித்த விழிப்புணர்வு பேனர்கள் | 100 Nos | 11000.00 | 10000.00 | 12000.00 |
| | **மொத்தம்** | | **33100.00** | **31400.00** | **34800.00** |

வரப்பெற்ற மூனறு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள Shankar Digital Banner Offset & Book Binding, Gym **அவர்களின் விலைப்புள்ளியினை அனுமதிக்கலாம்.**

**அலுலவக குறிப்பு** :

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று முன் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.1338/2017/எச்1)**

**தனி அலுவலர்/ஆணையாளர்**
**குடியாத்தம் நகராட்சி**